# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிகளுக்கு 10.05.2017 முதல் 17.05.2017 முடிய நேர்காணல் நடைபெற்று வருகிறது.

நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டோர்களில், தகுதி வாய்ந்த நபர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் மூலம் நியாயமான முறையில் நேர்காணல் நடத்தப்பட்டு, நேர்காணலின் அடிப்படையில் தகுதி வாய்ந்த நபர்கள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால், பணி நியமன ஆணை வழங்கப்படும்.

மேற்படி நியமனங்கள் யாவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் கண்காணிப்பில் முற்றிலும் நியாயமான முறையில் நடைபெறும் என்பதால், கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணி நியமனம் தொடர்பாக நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் யாரும், துறை ரீதியிலான அலுவலர்களை தொடர்பு கொள்ள வேண்டாம் எனவும், எவ்வித இடைத்தரகர்களையும் நம்பி ஏமாற வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.